செ.வெ.எண்:63 நாள்:22.10.2017

# பத்திரிக்கைச்செய்தி

03.10.2017 அன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. அதன் பின்னர் 03.10.2017 முதல் தொடங்கி 31.10.2017 முடிய சிறப்பு சுருக்க திருத்தம் நடைபெற்றுவருகிறது. இன்று 22.10.2017 வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், திருத்தம் மற்றும் நீக்கல் தொடர்பான 2வது சிறப்பு முகாம் நடைபெறும் அனைத்து வாக்குச்சாவடி மையங்களை ஆய்வு செய்திட திருநெல்வேலி மாவட்டத்திற்கு வாக்காளர் பட்டியல் பார்வையாளராக (Roll Observer) நியமனம் செய்யப்பட்டுள்ள சென்னை பேரிடர் மேலாண்மை ஆணையர் திரு.ராஜேந்திர ரத்னு,இ.ஆ.ப., அவர்கள் இன்று வருகை புரிந்து, பாளையங்கோட்டை வட்டம் வி.எம்.சத்திரம் கிராமம் ரோஸ்மேரி மெட்ரிகுலேசன் பள்ளி, ஜான்ஸ் மேல்நிலைப்பள்ளி மற்றும் சாராள் டக்கர் மேல்நிலைப்பள்ளி ஆகியவற்றில் அமைந்துள்ள வாக்குச்சாவடி மையங்களை பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் பிற்பகல் 3.00 மணியளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் வைத்து வாக்காளர் பட்டியல் பார்வையாளர் அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் முன்னிலையில் வாக்காளர் பதிவு அலுவலர்கள், உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள், மண்டல அலுவலர்கள் மற்றும் இதர அரசு அலுவலர்களுடனான பணி ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. அதன் பின்னர் பிற்பகல் 03.30 மணியளவில் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட்டது. மேற்படி ஆய்வு கூட்டத்தில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், சேரன்மகாதேவி சார்ஆட்சியர் திரு.ஆகாஷ், மாநகராட்சி ஆணையர் (பொறுப்பு) டாக்டர்.நாராயணன்நாயர், திருநெல்வேலி கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, தென்காசி கோட்டாட்சியர் திரு.ராஜேந்திரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ராமசுப்பிரமணியன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) திரு.விஜயகுமார், உதவி ஆணையர்கள் திரு.வசந்தராஜன், திருமதி.கவிதா, திருமதி.சுப்புலெட்சுமி, திருமதி.கீதா, தேர்தல் தனி வட்டாட்சியர் திரு.சுகுமார் மற்றும் அனைத்து வட்டாட்சியர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி